DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

-------------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.10**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | மகேஷ்வரன் |
| Father Name | : | சுப்பிரமணியன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.03.2025.

(2வது எதிரி ஆஜர். 3 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர். 1வது எதிரி ஆஜர் இல்லை, 1வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>**அரசு தரப்பில் முதல் விசாரணை :**</u>

நான் தற்போது மதுரை மாநகராட்சியில் மக்கள் தொடர்பு துறை அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் காயம்பட்ட ராமகிருஷ்ணன் என்னுடைய அண்ணன் ஆவார். வழக்கு சம்பவ சமயத்தில் நான் என்னுடைய மனைவி உறவினர் வீட்டு திருமணத்தில் கலந்து கொள்வதற்காக காரைக்குடி சென்றிருந்தேன். கடந்த 21.11.2015ம் தேதி என்னுடைய நண்பர் மனோஜ் என்பவர் எனக்கு போன் செய்து, என் அண்ணனை குத்திவிட்டதாகவும், தேவதாஸ் மருத்துவமனைக்கு கூட்டி சென்றுள்ளார்கள் என்றும் சொன்னார். உடனே நான் அங்கிருந்து கிளம்பி வருகிறேன் என்று அவரிடம் தகவல் சொன்னேன். நான் வரும் போது மறுபடியும் என்னுடைய நண்பர் போன் செய்து தேவதாஸ் மருத்துவமனையிலிருந்து அப்போலோ மருத்துவமனைக்கு சேர்த்துள்ளதாக சொன்னார். நான் நேராக அப்போலோ மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அங்கு என் அண்ணனுடன் அவரின் நண்பர்கள் ராஜ்மோகன், ஈஸ்வரன் ஆகியோர்கள் மருத்துவமனையில் இருந்தார்கள்.

போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>1 மற்றும் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

நான் போலிசார் விசாரணையில் எனது நண்பர் மனோஜ் என்பவர் எனக்கு போன் செய்து எனது அண்ணன் ராமகிருஷ்ணனை யாரோ கத்தியால் குத்திட்டாங்க என்று சொன்னார் என்று சொல்லியுள்ளேன். அப்போலோ மருத்துவமனையில் என் அண்ணன் ராமகிருஷ்ணனை சிகிச்சைக்காக அனுமதித்த போது, அந்த மருத்துவமனையில் பதிவு செய்திருந்த மருத்துவ ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை. என் அண்ணன் ராமகிருஷ்ணன் அவருடைய பாதுகாப்பிற்காக துப்பாக்கி உரிமம் வாங்கியிருந்தார் என்றால் சரிதான். அது போல் என் அண்ணன் ராமகிருஷ்ணன் மதுரை ரேஸ் கோர்ஸ் பேட்மிண்டன் கிளப்பில் செயலாளராக இருந்தார் என்றால் சரிதான்.

**<u>2 மற்றும் 7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

1ம் எதிரி தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர் மேற்கொண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக 2 மற்றும் 7 எதிரிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.